[1983 பிப்ரவரி]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுதும் அந்த நடைமுறை தான் இருக்கிறது. மீண்டும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனையை ஏற்று, அந்த கட்டாயப்படுத்தப்படும். வற்புறுத்தப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி வார்பட தொழிற்சாலையிலே உற்பத்தி செய்கிற இரும்பு பைப்புகள் அதிகவிலை உள்ளதாக இருக்கிறது அதனால் குடிநீர் வடிகால் வாரியமும், வீட்டு வசதி வாரியமும், அங்கே வாங்காமல் வெளியிலே வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால், அதை நீக்குவதற்கு அந்த நிறுவனத்திடமே வாங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வினைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதியில் மின்தூக்கி, தொலைபேசி, சரிவர இயங்காமை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு முக்கியமான பிரச்சனைகளைப் பற்றித் தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர நான் விரும்புகிறேன். தற்போது சென்னையிலே உள்ள ஆறு மாடி சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலே 6 லிப்ட்டுகள் உள்ளன. ஆனால் அதில் இரண்டு லிப்ட்டுகள் எப்போதும் நிரந்தரமாக இயங்குவதில்லை. மீதி உள்ள 4 லிப்ட்டுகளில் கூட இப்போது ஓரே ஒரு லிப்ட்டு தான் இயங்குகிறது. எங்களைப் போன்ற இளைஞர்கள் ஐந்து ஆறு மாடிகளில் ஏறிச் செல்வதில் பிரச்னை இல்லை. ஆனால் வயதான சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றும் பார்க்க வருகின்றவர்களும் ஐந்தாறு மாடிகள் ஏறி வருவது என்பது சிரமமாக இருக்கிறது. எனவே, அந்த லிப்ட்டுகள் சீக்கிரமாக இயங்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

அடுத்த பிரச்னை, இதில் கட்சி வேறுபாடு இருக்காது என்றே கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள தொலை பேசி நிரந்தர நோயாளியாகவே இருக்கிறது,

என்று குறிப்பிடுவதற்காக நான் வருந்துகிறேன். பல சமயங்களில் நாங்கள் பிறருடன் தொடர்பு கொள்வதாக இருந்தாலும் அல்லது வெளியார் எங்களுடன் தொடர்பு கொள்வதாக இருந்தாலும் அந்த தொலைபேசிகள் சரியாக இயங்குவது கிடையாது. கேட்டால் கெப்பாசிட்டிக்கு அதிகமாக இணைப்பு கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இது மிகவும் முக்கியமான பிரச்னை சட்டமன்றம் கூடியுள்ள அந்த நேரத்தில் பலரோடு பேச வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லிப்டைப் பொறுத்தவரைக்கும் நமக்கு சப்ளை செய்த அந்தக் கம்பெனி ஸ்ட்ரைக்கில் இருக்கிறது. அதனால் இரண்டு லிப்டுகள் சரியாக வேலை செய்ய முடியவில்லை. மற்ற இரண்டு லிப்டுகள் வேலை செய்கின்றன. மின்சாரத் தடை இல்லாத நேரம் பூராவும் அவைகள் வேலை செய்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஒன்றுதான் வேலை செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இப்பொழுது கேட்டேன், இரண்டு லிப்டுகள் வேலை செய்கின்றன. மற்ற இரண்டு லிப்டுகள் வேலை செய்யாததற்கு காரணம் சப்ளை செய்த அந்தக் கம்பெனியில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இருப்பதால் அவர்கள் வந்து வேலை செய்ய முடியவில்லை. வேலைநிறுத்தம் முடிந்த பிறகு அவர்கள் வந்து பார்ப்பார்கள். (குறுக்கீடு) ஏதாவது ஒரு கம்பெனியை வைத்துச் சரி செய்யப் பார்க்கிறோம்.

தொலைபேசியைப் பொறுத்தவரையிலும் நீங்கள்தான் பொறுப்பு. மத்திய சர்க்காரிடத்திலே சொல்லித்தான் செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஸ்டீபன் அமைச்சராக இருந்தபொழுது முடியவில்லை. அவரே பலமுறை சொல்லியிருக்கிறார். தொலைபேசியில் அடிக்கடி புகாராறுதான். முடிந்த அளவிற்கு குறைபாடு இல்லாமல் செய்யப் பார்க்கலாம். குறைபாடு இல்லாத தொலைபேசி இந்தியாவிலேயே கிடையாது. ஆகவே ஹாஸ்டலுக்கு மட்டும் அப்படித் தனியாக வரும் என்று நான் கருதவில்லை. ஆறு பேர் ஒட்டு மொத்தமாக தொலைபேசியை எடுத்தால் ஜாம் ஆகிறது என்று சொல்கிறார்கள், ரெக்டிஃபை செய்வதற்கு, ரிப்பேர் செய்வதற்கு அங்கேயிருந்துதான் ஆள் வரவேண்டியிருக்கிறது. குறைபாட்டை நீக்குவதற்கு நாம் பலமுறை எழுதியாகி விட்டது. அவர்கள் இதுவரையில் வந்து குறையை நீக்கவில்லை. வேறு என்ன வழி என்று பார்க்க வேண்டும். அமெரிக்காவிலேயிருந்து பெல் கம்பெனி மாதிரி வரச்சொல்லி ஏதாவது பண்ணினால்தான் உண்டு. நம் நாட்டில் அதே மாதிரி கிடையாது.